Crl.Misc.40.

**EXAMINATION OF THE ACCUSED**

(Section 316, BNSS)

\- - - - - - -

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2, SATTUR.

Calendar Case No. CC 259 of 2025

STATEMENT OF ACCUSED

| | | |
|---|---|---|
| Name | : | சுந்தரமூர்த்தி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Date : 06.06.2026

Questions : 06.10.2017 ம் தேதி 14.00 மணியளவில் சாத்தூர் நகர் காவல் ஆய்வாளர் போலீஸ் பார்ட்டி சகிதம் குற்றத்தடுப்பு மற்றும் திருட்டு வி.சி.டி.சம்பந்தமாக ரோந்து அலுவலில் இருந்தபோது கிடைத்த தகவலின் பேரில் சாத்தூர் மெயின்ரோடு பெருமாள் கோவில் தெரு சந்திப்பில் உள்ள S.R. ராஜம்மாள் காம்ப்ளக்ஸ் முதல் மாடியில் உள்ள கலாம் மொபைல்ஸ் கடையில் எதிரி சுந்தரமூர்த்தி ஆகிய நீங்கள் அரசு அனுமதியில்லாமல் புதிய சினிமா படங்களையும், தடை செய்யப்பட்ட ஆபச படங்களையும் பதிவிறக்கம் செய்து பென்டிரைவில் பதிவு செய்து கொடுத்த குற்றத்திற்காக எதிரி சுந்தரமூர்த்தி ஆகிய உம்மீது சாத்தூர் நகர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் பிரிவுகள் 292 IPC r/w 67 IT Act and 51(b)(a) Copyright Act ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளாரே அது பற்றி நீர் கூறும் முகாந்திரம் என்ன? நீர் என்ன சொல்கிறீர்?

Answers : உண்மை

Questions: எதிரி சுந்தரமூர்த்தி ஆகிய நீர் பிரிவுகள் 292 IPC r/w 67 IT Act and 51(b)(a) Copyright Act –ன் படி குற்றம் குறித்து விளக்கி வினாவக் கேட்டீரே, நீர் என்ன குற்றவாளியா? இல்லையா?

Answers : குற்றவாளி, குறைந்தபட்ச தண்டனை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்

கேள்விகள் என்னால் நேரடியாக எதிரியிடம் கேட்கப்பட்டு, அவர் கூறிய பதில் என்னால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

(ஓம்/–சா.வரதராஜன்)
நீதித்துறை நடுவர், எண்.2, சாத்தூர்

// உண்மை நகல் // P.P

<u>பல தலைப்பு கொண்ட குற்றச்சாட்டு</u>

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.259/2025

திரு.சா.வரதராஜன், B.A.B.L.,
நீதித்துறை நடுவர் எண்.II சாத்தூர் ஆகிய நான்

<u>எதிரி</u>
சுந்தரமூர்த்தி, த/பெ.மாணிக்கம் ஆகிய உம் மீது கீழ்கண்டவாறு குற்றம் சாட்டுகின்றேன்.

**<u>1 வது குற்றச்சாட்டு:-</u> (எதிரி மீது இ.த.ச பிரிவு 292 மற்றும் 67 IT Act ன் கீழ் குற்றச்சாட்டு)**

06.10.2017 ம் தேதி 14.00 மணியளவில் சாத்தூர் நகர் காவல் ஆய்வாளர் போலீஸ் பார்ட்டி சகிதம் குற்றத்தடுப்பு மற்றும் திருட்டு வி.சி.டி.சம்பந்தமாக ரோந்து அலுவலில் இருந்தபோது கிடைத்த தகவலின் பேரில் சாத்தூர் மெயின்ரோடு பெருமாள் கோவில் தெரு சந்திப்பில் உள்ள S.R. ராஜம்மாள் காம்ப்ளக்ஸ் முதல் மாடியில் உள்ள கலாம் மொபைல்ஸ் கடையில் எதிரி சுந்தரமூர்த்தி ஆகிய நீங்கள் அரசு அனுமதியில்லாமல் புதிய சினிமா படங்களையும், தடை செய்யப்பட்ட ஆபாச படங்களையும் பதிவிறக்கம் செய்து பென்டிரைவில் பதிவு செய்து கொடுத்த குற்றத்திற்காக எதிரி சுந்தரமூர்த்தி ஆகிய நீங்கள் இ.த.ச பிரிவு 292 மற்றும் 67 IT Act ன் படி இந்நீதிமன்றத்தால் தண்டிக்கத்தக்கதும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளக்கூடியதுமான குற்றம் ஒன்றைச் செய்துள்ளீர்கள்.

**<u>2 வது குற்றச்சாட்டு:-</u> (எதிரி மீது 51(b)(a) உ/இ 63 Copyright Act ன் கீழ் குற்றச்சாட்டு)**

மேற்படி செய்கையின் தொடர்ச்சியாக புதிய சினிமா படங்கள் மற்றும் தடை செய்யப்பட்ட ஆபாச படங்களை அனுமதி பெறாமல் பென்டிரைவில் பதிவு செய்து கொடுத்த குற்றத்திற்காக எதிரி சுந்தரமூர்த்தி ஆகிய நீங்கள்ர் 51(b)(a) **உ/இ 63** Copyright Act-ன் படி இந்நீதிமன்றத்தால் தண்டிக்கத்தக்கதும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளக்கூடியதுமான குற்றம் ஒன்றைச் செய்துள்ளீர்கள்.

மேற்சொன்ன குற்றச்சாட்டின் பேரில் எதிரி சுந்தரமூர்த்தி ஆகிய நீங்கள் நீர் இந்நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட வேண்டுமென்று இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

2026 ம் ஆண்டு ஜூன் மாதம் 06 ம் நாளிட்டது.

(ஓம்/-சா.வரதராஜன்)
நீதித்துறை நடுவர் எண்.2,
சாத்தூர்.

<u>06.06.2026</u>
எதிரிக்கு என்னால் தமிழில் விளக்கி காட்டப்பட்டது.

(ஓம்/-சா.வரதராஜன்)
நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.

// உண்மை நகல் // P.P